<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 20–ம் நாள் புதன்கிழமை

<u>இடைநிலை மனுஎண்.2/2023</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.99/2023</u>

வெண்ணிலா குடும்ப மேனேஜர் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுப்ரமணியன்
2. சரசு
3. சுகுமார் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

இம்மனு 12.02.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.பி. ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் K. திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்/ வாதிக்கு ஆதரவாக பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு விசாரணை முடியும் வரை எதிர்மனுதாரர்களோ அவரது ஆட்களோ வழக்குறு சொத்தில் மனுதாரர்/வாதி மனுசொத்தில் அமைதியான அனுபவத்தினை இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால தடை உத்தரவு, தற்காலிக தடை உத்தரவு பரிகாரம் வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39, விதி 1 & 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) மனுதாரர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தினை மனுதாரரரின் கணவர் ராமலிங்கம் என்பவர் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து தற்போது பிழைப்பு நிமித்தமாக வெளிநாட்டில் உள்ளார் என்றும், தாவா சொத்து 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு ஆதிகாலத்தில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், கடந்த 11.06.2004 ஆவண எண்.1405/2004 ன் படி மறுபயனுக்காக வேண்டி

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:31:14 +0530

பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம், அனுக்கூர் குடிக்காடு கிராமத்தை சேர்ந்த நாரயணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், பின்னிட்டு 13.04.2005 ஆவண எண்.851/2005ன் படி அனுக்கூர்குடிக்காடு கிராமத்தை சேர்ந்த ராமசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், பின்னிட்டு கடந்த 29.05.2010 ஆவண எண்.1279/2010ன் படி மறுபயனுக்காக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், பின்னிட்டு தாவா சொத்தினை கடந்த 16.04.2013 அன்று ஆவண எண்.1209/2010–ன் படி மறுபயனுக்காக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், தாவா சொத்தின் சர்வே எண்.447/5ஏ–ல் ஏக்கர் 0.92 சென்ட் நிலத்தினை கிருஷ்ணமூர்த்தி மனைவி மாரியாயி என்பவருக்கு கடந்த 05.05.2015 ஆவண எண்.608/2015ன் படி கிரையம் கொடுத்து விட்டார் என்றும், மேலும் தாவா சொத்தின் சர்வே எண்.447/2 –ல் உள்ள ஏக்ககர் 0.59 சென்ட் நிலத்தினை கடந்த 02.05.2016 ஆவண எண்.1297/2016ன் படி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அவ்வாறு கிரையம் பெற்ற மாரியாயி மற்றும் அவரது கணவர் கிருஷ்ணமூரத்தி ஆகிய இருவரும் சேர்ந்து கடந்த 04.04.2018 அன்று ஆவண எண்.889/2018– ன் படி மறுபயனுக்காக மனுதாரருக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும், இந்த சூழ்நிலையில் 1ம் எதிர்மனுதார்/ 1ம் பிரதிவாதி தான் ஏற்கனவே 11.06.2004ல் நாராயணன் என்பவருக்கு கிரையம் கொடுத்த பிறகு தாவா சொத்து எவ்வித உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும், தாவா சொத்தினை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள், மனுதாரரரிடம் மீண்டும் தங்களுக்கு கிரையம் கொடுக்க வேண்டும் என்று வீண் விவகாரம் செய்து வருகிறார்கள் என்றும், எனவே எதிர்மனுதாரர்களின் இத்தகைய செய்கையை சமூக நீதிமன்றத்தால் மட்டுமே கட்டுபடுத்த முடியும் என்றும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தற்காலிக தடை உத்தரவு பரிகாரம் வழங்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்

3)மனுதாரர் கூறிய சங்கதிகளை மறுத்தும், மனுவில் கூறிய செய்திகளின் நம்பகத் தன்மையை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர் என்றும், உண்மையில் வாதி வழக்குரையில் சொல்லியுள்ள கடனுக்கான கிரையங்கள் அனைத்தும் கடனுக்காக ஏற்பட்ட கிரையங்கள் என்றும், 1ம் பிரதிவாதிக்கு ஆஸ்மாவால் உடல்நலக்குறைவு

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:31:25 +0530

ஏற்பட்டதன் காரணத்தினால் மருத்துவச் செலவிற்கு தாவா சொத்தை காட்டி 1ம் பிரதிவாதியால் ஆரம்பத்தில் 11.06.2004 ல் நாராயணன் என்பவரிடம் கடன் பெறப்பட்டது என்றும், வாதியின் கணவருக்கு கிரையம் சொடுத்த கிரையதாரர்கள் மற்றும் முந்தைய கிரையதாரர்கள் அனைவர்கள் முன்னிலையிலும் 1ம் பிரதிவாதி வாதியின் கணவருக்கு கொடுக்கவேண்டிய நியாயமான அசல் வட்டி தொகையினை ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கணக்கு பார்த்து அந்த தொகையினை கடந்த 09.08.202ல் பிரதிவாதிகள் வாதியிடம் கொடுக்க முயன்றபோது வாதி வெளிநாட்டில் உள்ள தனது கணவரிடம் தகவல் சொல்லிவிட்டு பிறகு பெற்றுக்கொள்ளவதாகவும், வாதியின் கணவர் வாதிக்கு பவர் எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் வாதியின் கணவருக்கு வரவேண்டிய தொகையினை பெற்றுக்கொண்டு மறுக்கிரையம் எழுதிக்கொடுத்து விடுவதாகவும் கூறினார் என்றும், ஆனால் வாதி தாவா சொத்திற்கான கிரையப்பத்திரம், பட்டா போன்ற பதிவுத்துறை மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் வாதியின் கணவர் பெயரில் உள்ளதை அனுகூலமாக வைத்துக்கொண்டு தாவா சொத்தை மறுகிரையம் எழுதிக்கொடுக்க மனமில்லாமல் வீண் காலம் கடத்தி வருகிறார் என்றும், இது தொடர்பாக 05.09.2023 ல் 1ம் பிரதிவாதியால் பெரம்பலூர் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றும், விசாரணை முடிவில் வாதிக்கு ரூ.30,00,000/- கொடுக்கவேண்டும் என்றும், மேற்படி தொகையில் ரூ.10,00,000/- த்தை 07.10.2023ம் தேதிக்குள் கொடுக்கவேண்டும் என்றும் மீதமுள்ள ரூ.20,00,000/- த்தை கிரையபத்திரம் எழுதும்போது கொடுத்து கிரையம் எழுதிக்கொள்வது என்றும் பேசி முடிக்கப்பட்டது என்றும், ஆனால் வாதி அதை பெற்றுக்கொள்ள மனமில்லாமல் தாவாவை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கை பொறுத்தவரை பதிவுத்துறை மற்றும் வருவாய்துறை ஆவணங்களை வைத்துமட்டும் தாவா சொத்தின் உரிமை மற்றும் அனுபவத்தை உறுதி செய்ய இயலாது என்றும், எனவே வாதியின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:31:35 +0530

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**தீர்வு**

6) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா பொருத்து நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை ஆராய்கையில் இதனை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தபட்டதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்படும் அத்துனை கிரையங்களும் கடனாக ஏற்படுத்தப்பட்டது என்றும் அவை 1ம் எதிர்மனுதாரரின் முன்னிலையிலேயே அவரது சம்மதத்துடனே ஏற்படுத்தப்பட்டது என்றும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்/ வாதி மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக காவல் துறையினரிடம் புகார் அளித்து இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்பட்டது என்றும் அதனை மறுத்து மனுதாரர்/வாதி ஆவணங்கள் தனக்கு ஆதரவாக உள்ளதை பயன்படுத்தி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், கூறியுள்ளதை கருத்தில் கொண்டு ஆராய்கையில், தாவா அசல் வழக்கானது 09.10.2023ம் தேதியிலேயே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், இம்மனுவும் அன்றைய தேதியில் இருந்து இன்றைய நாள் வரை சுமார் 4 மாதம் ஆகி நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரர்கள் கூறியபடி எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை அனுபவிப்பதை இடையூறு செய்திருந்தால் மனுதாரர்கள் முன்கூட்டியே இம்மனுவின் மீது போதிய அழுத்தம் செலுத்தி உத்தரவு பெற்றிருக்க முடியும் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை முற்றிலும் மறுத்து எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதும், தற்போது அசல் வழக்கானது வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் அசல் வழக்கிலும் இம்மனுவில் கோரிய பரிகாரம் கோரப்பட்டுள்ளதாலும் அசல் வழக்கில் இம்மனுவில் கோரிய பரிகாரம் குறித்தும் தீர்மானிக்க முடியும் என்பதாலும் மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய State of Uttar Pradesh – v – Ram Sukhi Devi, reported in (2005) 9 SCC 733 என்ற வழக்கில்,"By an interim order, a final relief cannot be granted. In other words no interim relief, which amounts to a final relief, should be granted at the initial stage." என்றும்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:31:44 +0530

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Bank of Tokyo Mitusubishi Limited, Mumbai –Vs– Spartex Ceramics India Limited, Chennai and others reported in (2007) 3 MLJ 203 என்ற வழக்கில்," ...... in deciding interlocutory applications, the Court cannot grant the main relief sought for in the suit ast the interim stage which in other words, would tantamount to a pre–trial decree." என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டு ஆராய்கையில், இவ்வழக்கில் மனுதாரர்கள் தாவா சொத்து பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள நிலையில் மேற்படி முன்தீர்ப்புரைகள் இவ்வழக்கிற்கும் பொருந்தி வருவதாகவே இந்நீதிமன்றம் கருதியும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது வழக்கு விசாரணைக்கு முந்தைய தீர்ப்பாணையாக ஆகி வழக்கு விசாரணையை பாதிக்கும் என்று கருதியும் மேலும் அசல் வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை அசல் வழக்கிலேயே வழக்கு விசாரணையின் மூலம் முழுவதுமாக தீர்மானிக்க முடியும் என்று கருதியும் இம்மனுவில் கண்டுள்ள சட்ட தகுதிகளுக்குள் (Merit) செல்லாமல் இம்மனுவை அனுமதிப்பது மேற்கண்ட முன்தீர்ப்புரையின் படி ஏற்கத்தக்கதல்ல என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு மார்ச் 20ம் தேதி கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:31:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.20 18:32:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.